செ.வெ.எண் :. 287 நாள் :. 30/03/10

# செய்திக்குறிப்பு

## தொழில் முனைவோராக விரும்பும் ஆதி திராவிட / பழங்குடியினர்களுக்கு நிதியுதவி

தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆதிதிராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும் இக்கழகம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு (வேலை வாய்ப்பு / சுயதொழில் தொடங்க) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து வருகிறது. இக்கழகம் தனி நபர் மற்றும் சுயஉதவி குழுக்களுக்கு பொருளாதார வளர்ச்சி திட்டங்களுக்காக கடனும் வழங்கி வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்கள் அதிக முதலீடு உள்ள தொழில் தொடங்குவதை ஊக்குவிக்க தமிழக அரசு சிறப்பு முதலீட்டு மானியம் அளிக்க முன்வந்துள்ளது. திட்டத்தொகை ரூ.2.50 கோடிக்கு மேல் உள்ள திட்டங்களுக்கு திட்டத்தொகையில் 10% அல்லது ரூ.50 இலட்சம் வரை சிறப்பு மூலதன மானியமாக தாட்கோ மூலம் வழங்கப்படும். இச்சிறப்பு மூலதன மானியம் பிற துறை / அமைச்சகங்களிலிருந்து வழங்கப்படும் மானியத்துடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வேண்டிய கடன் வங்கி / நிதி நிறுவனங்களிலிருந்தும் பயனாளி பங்குத்தொகையாகவும் பெறப்படும். சிறப்பு மூலதன மானியம் பெற தாட்கோ நடைமுறைகளை எளிதாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் தொழில்முனைவோர் வங்கியில் திட்ட அறிக்கை கொடுத்து வங்கி ஒப்பளிப்பு கடிதம் பெற்றவுடன் மூலதன மானியத்துக்காக தாட்கோவை அணுகலாம். இதற்கான விண்ணப்பங்கள் www.tahdco.tn.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். உரிய இணைப்புகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.05.2010க்குள் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை 600 101 சமர்ப்பிக்க வேண்டும். தொழில் முனைவோர் தங்கள் சந்தேகங்கள் / தெளிவுரைகள் பெற tahdcoheadoffice@yahoo.com என்ற மின்அஞ்சல் முகவரி அல்லது தாட்கோ தலைமை அலுவலக தொலைபேசி எண் 044 26154075 / கைபேசி 9445029450 ல் தொடர்பு கொள்ளலாம்.

மேலாண்மை இயக்குநர்
தாட்கோ

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9